(See Rule 42 of CRP)

DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO.280/2020
**Depostitions of PW- 4 Witness for**

| | |
|---|---|
| Name | பாஸ்டீன் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of March 2024.

Signature of Witness.

05.03.2024

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை–**

நான் திருவில்லிபுத்தூர் சந்தைபேட்டை தெருவில் குடியிருந்து வருகிறேன். ஜெராக்ஸ் கடை வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். 03.03.2019 ம் தேதி மாலை இந்திராநகர் அன்னை வேளாங்கன்னி சர்ச்சில் வைத்து போட்டுக்கொடுத்தேன். போலீசார் அந்த இடத்தில் திருடுபோனது சம்மந்தமாக அந்த இடத்தை பார்வையிட்டு ஒரு வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், குமார் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

பார்வை மகசர் அ.சா. ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

இன்னாசியம்மாள் எனக்கு உறவினரா என்றால் இல்லை. அவருக்கும் எனக்கும் சம்மந்தம் கிடையாது. நான் சர்ச்சில்வைத்து கையெழுத்து போடும் போது நேரம் மதியம் 03.00 முதல் 04.00 க்குள் இருக்கும். போலீசார் எத்தனை பக்கம் எழுதினார்கள் என்றால் இரண்டு, மூன்று பக்கம் எழுதினார்கள். மூன்று பக்கத்திலும் கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். மூன்று தாளிலும் எழுதிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் நான் கேட்டேன், களவு போனது சம்மந்தமாக என்று போலீசார் சொன்னார்கள். இன்னாசியம்மாள் எனக்கு அக்கா முறை என்றும், அதனால் நான் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.